**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM.**

| | | |
|---|---|---|
| **MCOP No. 299/2024** | **நாள் – 04.06.2026** | **சாட்சி –எ.ம.சா.1** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | தந்தை பெயர் | கோபால் |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கும்பகோணம். | வயது | 31/2026 |

**முதல் விசாரணை:**

நான் வட்டார போக்குவரத்து அலுவலகம், கும்பகோணத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை கிடைக்கப்பெற்று கோரிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1ஆக சாட்சியம் அளிக்கிறேன்.

1. 04.06.2026 தேதியிட்ட நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அங்கீகார கடிதம் **சா.சா.ஆ–1.**

2. 02.04.2024 தேதியிட்ட TN 68 Q 1837 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ–2.**

3. 25.03.2024 தேதியிட்ட TN 68 AJ 7327 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ–3.**

4. TN 68 AJ 7327 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் விபத்து சமயத்தில் இருந்ததா என்பது குறித்து சாரதி செயலியில் தேடியதற்கான சான்று **சா.சா.ஆ–4.**

விபத்து சமயத்தில் TN 68 Q 1837 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்யும்பொழுது வாகனத்திற்கான காப்பீடு பாலிசி, பதிவு சான்று, ஓட்டுனர் உரிமம் ஆகியவை அந்த வாகனத்திற்கு இல்லை என்பதால் அந்த வாகனம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. TN 68 AJ 7327 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மணிகண்டன் ஆவார். அந்த வாகனத்தின் ஓட்டுனர் சியாம் சுந்தர் ஆவார். மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் கொடுக்கப்படவில்லை என மோட்டார்

வாகன ஆய்வறிக்கை சா.சா.ஆ–3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சாரதி செயலியில் மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனர் சியாம் சுந்தர், த/பெ அன்பு செல்வம் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று தேடிப்பார்த்தலில் விபத்து சமயத்தில் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என தெரியவந்தது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

TN 68 Q 1837 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி விபத்து சமயத்தில் இருந்தது என்றால் அவ்வாறு காப்பீடு பாலிசி இருந்தது என்று சா.சா.ஆ–2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. TN 68 AJ 7327 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி விபத்து சமயத்தில் இருந்தது என்றால் அவ்வாறு காப்பீடு பாலிசி இருந்தது என்று சா.சா.ஆ–3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி அழைப்பாணை பெற்றவுடன் அந்த ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் உள்ள முகவரியின் அடிப்படையிலும் சாட்சி அழைப்பாணையில் உள்ள முகவரியின் அடிப்படையிலும் சரிபார்த்தேன் என்றால் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் உள்ள முகவரியின் அடிப்படையில் சரிபார்த்தேன். உரிய ஆவணத்தின் அடிப்படையில் ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று தேடியிருந்தால் ஓட்டுனர் உரிமம் குறித்து தெரிந்திருக்கும் என்றாலும் நான் சரியான விபரங்களின் அடிப்படையில் தேடாமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ–4 சாரதி செயலியில் சியாம் சுந்தருக்கு எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டதா என்று தேடிப்பார்த்தோம் என்றால் சரிதான். சியாம் சுந்தருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றாலும் நான் உரிய ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்க்காமல் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G MANIKANDARAJA
Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.04 17:53:20 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.